தரத்தை மேம்படுத்திட 43 கோடியே 61 இலட்சம் ரூபாய், மொத்தம் 317 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திடும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

இங்குள்ள தமிழர்களை மட்டுமல்ல; கடல் கடந்து வாழக்கூடிய தமிழர்களையும் காக்கக்கூடிய அரசுதான் இந்த அரசு என்பதைக் கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பொதுத் துறை குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளின் துணையோடு, ஈழத்தில், உலகத்தால் தடை செய்யப்பட்ட பாஸ்பரஸ் குண்டுகளையும், ஏவுகணைகளையும் கொண்டு அழித்தொழிக்கப்பட்ட எமது மக்கள், எமது தொப்புள்கொடி உறவுகள், தாய் தமிழ்நாட்டுக்கு வருகை தந்து, இங்கு அமைதியாக வாழ வேண்டுமென்று வந்து, ** மோசமான குடிசைகளில் இங்கு தங்க வைக்கப்பட்டு, மிகப் பெரிய அவதிக்குள்ளான அந்த மக்களைக் காக்கின்ற வகையில், 2009 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், நான் கொண்டு வந்த ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் அடிப்படையில், அன்றையதினம் குழு அமைத்து, இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உட்பட அனைவரும் அந்த முகாம்களுக்குச் சென்று, ஆய்வு செய்து, அன்றைக்கு பல்வேறு உதவிகளைச் செய்தோம்.

அப்போது, ஈழ அகதி குழந்தைகள் உயர் கல்வி படிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. அதைச் சுட்டிக்காட்டியவுடனேயே அதை ஏற்றுக்கொண்டு, அவர்கள் பொறியியல் படிப்பு உட்பட உயர் கல்வி படிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. தி. வேல்முருகன்] [2021 ஆகஸ்ட் 27

அதற்கான உதவித்தொகையையும் அன்றைக்கு உயர்த்தித் தந்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு பதிவு செய்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களின் வழித்தோன்றலாக இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தற்போது 317 கோடி ரூபாயை, அந்த மக்களுக்கான வீடுகள், கல்வி உதவித்தொகை, உடை, அவர்களுக்கான சமையல் பாத்திரங்கள் என்று பல்வேறு தலைப்புகளின்கீழ் வழங்கியமைக்காக, உலகத் தமிழர்களின் சார்பாக, எண்ணற்ற தமிழ் அமைப்புகளின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இரண்டு சிறப்பு முகாம்களைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். முள்வேலி முகாம்களில் அடைபட்டுக் கிடந்ததைப்போல், இங்கு பல ஆண்டுகளாக திருச்சி, செய்யாறு போன்ற பகுதிகளில் இருக்கின்ற சிறப்பு முகாம்களில் அடைபட்டுக் கிடக்கின்ற, ஈழத் தமிழர்களை, பொது மன்னிப்பு என்கிற அடிப்படையில் விடுதலை செய்து, அவர்கள் விரும்புகிற தத்தமது நாட்டுக்கோ அல்லது இங்கு உறவுகளோடு வாழ்வதற்கோ அல்லது தாயகம் திரும்புவதற்கோ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தாயுள்ளத்தோடு இத்தனை கோடி ரூபாய் நிதியுதவி அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நீண்ட, நெடிய நாட்களாக கோரிக்கையாக இருக்கின்ற அந்த சிறப்பு முகாம்கள் மூடப்பட வேண்டும். நாங்கள் அங்குதான், முகாம்களுக்குள் அடைபட்டுக் கிடந்தோம், இங்கும் அதே நிலையில் வாழ்கிறோமே என்று ஏங்குகிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில், தளபதி அவர்களின் ஆட்சியில், இந்த முகாம்கள் மூடப்பட்டு, நாங்கள் செய்த சிறு குற்றங்களை மன்னித்து, எங்களை, எங்கள் உறவுகளோடு பொது வாழ்வு வாழ்வதற்கு வழிகாண வேண்டும் என்ற வேண்டுகோளை அவர்கள் முன் வைத்திருக்கிறார்கள். அந்த வேண்டுகோளுக்காக நான் இரண்டு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் தந்திருந்தேன். ஆதலால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இத்துடன் அவற்றையும் சேர்த்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த நல்ல அறிவிப்புக்கு, உலகத் தமிழர்களின் சார்பாக, புலம்பெயர்ந்த தமிழர்களின் சார்பாக, தமிழ்நாட்டு அகதி முகாம்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய இருகரம்

2021 ஆகஸ்ட் 27] [திரு. தி. வேல்முருகன்]

கூப்பி தெரிவித்து, நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். சுருக்கமாக, ஒரே வரியில் உரையை முடியுங்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற அறிவிப்புகளைப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே நமக்குப் பொருளாதார நெருக்கடி இருக்கின்றதா என்ற சந்தேகத்தை எழுப்பியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்று மட்டும் உறுதியாகிறது. தேவையான விஷயத்திற்கு நமக்கு நிதிப் பற்றாக்குறை கிடையாது. கடன் வாங்கியாவது இந்த விஷயங்களையெல்லாம் அறிவிப்போம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்திருக்கின்றார்கள். உலகம் முழுவதும் இருக்கின்ற ஐரோப்பிய நாடுகளில், பல நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இங்கு இருக்கின்ற இலங்கைத் தமிழர்கள், அதுபோன்ற வசதிகள் நமக்கு இல்லையென்று தங்கள் உறவினர்களோடு தொலைபேசியில் பேசுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த அறிவிப்புகள் ஐரோப்பிய நாடுகளில் வாழுகின்ற இலங்கைத் தமிழர்களுக்கு இணையாக, தமிழக முகாம்களில் வாழக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கும் அந்த வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார். இப்போது இல்லையென்றால், எப்போது என்று கேட்கின்ற வகையிலே அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழகம் 'வந்தாரை வாழவைக்கும்' என்ற அந்த நிலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மீண்டும் உருவாக்கியிருக்கிறார். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முற்பகல் 10–40

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ், தமிழகத்திலே முகாம்களில் வாழக்கூடிய இலங்கை தமிழர்களுக்கு 317 கோடியே 40 இலட்சம் ரூபாய்*

செலவில் வீடுகள், வீட்டில் சமைப்பதற்காக எரிவாயு அடுப்புகள், வீட்டிலுள்ள பிள்ளைகள் படிப்பதற்காக கல்வி உதவித்தொகை; அதுமட்டுமல்லாமல், அவர்கள் அணிவதற்காக ஆடை என்று வகை, வகையாக தமிழ்நாட்டை நாடி வந்திருக்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கு, இந்த அரசு ஒரு சிறப்பான இல்லம் என்பதை மெய்ப்பிக்கக்கூடிய வகையிலே செய்திருக்கின்ற அறிவிப்புகளை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கின்றேன். இரண்டு சிறப்பு முகாம்கள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும் பேசி முடியுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். அந்த முகாம்களில் இருப்பவர்கள் தங்களுடைய உறவினர்களோடு வாழ்வதற்கு விரும்புகிறார்கள். அப்படி அவர்களை அனுப்புவதற்கான அதிகாரம் நிச்சயமாக மாநில அரசுக்கு இருக்கின்றது. அந்தச் சட்டம், 3 (2) பிரிவு, அதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றது. எனவே, அந்த விருப்பத்தையும் இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110–ன்கீழ், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அளித்துள்ள சிறப்புகள் பாராட்டுக்குரியதாக இருக்கின்றன. அவர்கள் விடும் கண்ணீரைத் துடைக்கின்ற அளவில் நிதி ஒதுக்கியிருக்கின்றார்கள். இந்த நேரத்தில் நான் ஓர் ஆங்கில கவிஞர் எழுதியதைச் சொல்லியே ஆக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரமாகச் சொல்லி முடியுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

2021 ஆகஸ்ட் 27] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

"If I can stop one heart from breaking,
I shall not live in vain;
If I can ease one life the aching,
Or cool one pain,
Or help one fainting robin
Unto his nest again,
I shall not live in vain."

என்று சொல்லியிருக்கின்றார். ஒருவனின் கண்ணீரைத் துடைப்பதற்கும், அவர்கள் படுகின்ற துன்பத்தைக் களைவதற்கும், பட்டினியால் வாடுகின்ற ஏழையெளிய மக்களுக்கு பால்சோறு வார்ப்பதற்கும் இந்த அறிவிப்பு வழிவகை செய்கிறது. ஆகவே, இந்தக் கவிதையில் கண்டுள்ளபடி, நொறுங்குகின்ற எங்கள் இதயங்களைத் தடுக்கின்ற ஆற்றல் உங்களுக்கு இருக்கின்றது. ஏழைகள் விடுகின்ற கண்ணீரைத் துடைக்கின்ற ஒரு மன உயர்வு உங்களுக்கு இருக்கின்றது. நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலும் பாராட்டுக்குரியதாக இருக்கின்றது. ஆகவே, நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கை இந்த மண்ணுயிர்க்கெல்லாம் இனியதாக இருக்கும் என்பதற்கு,

'தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது'

என்று வள்ளுவர் கூறியதைப்போல இருக்கிறது என்று சொல்லி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் வாழ்த்தி, நன்றி சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைவாழ் தமிழர்கள் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப் பிறகு, தமிழகத்தில் தஞ்சம் புகுந்தார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கடந்த 1983 முதல் 1998 வரை 100 கோடி ரூபாய் அளவிலே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்து, அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தினார். இன்றைக்கு அதே வழியில் வந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், முகாம்வாழ்*

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2021 ஆகஸ்ட் 27

இலங்கைத் தமிழர்களுக்கு 317.40 கோடி ரூபாய் செலவில் புதிதாக வீடுகள் கட்டுதல்; குடிநீர் வசதிக்காக 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு; அதேபோல, அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு முகாம் வாழ் இலங்கை தமிழர்கள் கௌரவத்தோடு வாழும் வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் மட்டுமின்றி, உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களும் பாராட்டும் அளவிற்கு இன்றைக்கு பல கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்.

முற்பகல் 10–45

அதேபோல, அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படும் என்ற கருத்தையும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதோடு அவர்களுக்காக ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தத் தமிழர்களுடைய பாராட்டைப் பெறுமளவுக்கு வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிப்புகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

***திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்களும் நம்மவர்களே, நம் சொந்தங்களே என்கிற அக்கறையிலிருந்தும், அந்த மக்களுடைய நலனிலிருந்தும், இந்த அவையில் விதி 110-ன்கீழ் இலங்கைத் தமிழர்களுக்கு கௌரவமான ஒரு வாழ்க்கையை, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கையை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்கிற அந்த உணர்விலிருந்து, அந்த அக்கறையிலிருந்து அவர்களுக்கு வீடுகள், அடிப்படை வசதிகள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கான அந்த நடவடிக்கைகள், அவர்களின் வேலைவாய்ப்பை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள், அதற்கான நிதி ஒதுக்கீடுகள், இவற்றை வழங்கியிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பிலேயும், எனது சார்பிலேயும், மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகின்றேன். அதுமட்டுமல்ல, அவர்களின் எதிர்காலத்திற்காக ஓர் ஆலோசனைக் குழுவை அமைத்து, இன்னும் அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த

2021 ஆகஸ்ட் 27] *[திரு. வி.பி. நாகைமாலி]*

இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்கிற அறிவிப்பையும் இந்த அவையில் தெரிவித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

***திரு. ம. சிந்தனை செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரை நூற்றாண்டுக் காலமாக தொடர்ந்து அழுதுகொண்டிருக்கின்ற ஈழத் தமிழர்கள், தமிழகத்திலே முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் பல்வேறு கோரிக்கைகளை தாயுள்ளத்தோடு பரிசீலித்து, ரூபாய் 300 கோடிக்கும் மேலான திட்டங்களை அறிவித்து, அவர்களை அரவணைத்திருக்கின்ற, விதி 110-ன்கீழ் அறிவிப்புகளை முன் வைத்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நெஞ்சார விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே பாராட்டி மகிழ்கிறோம். அவர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளை நிறைவேற்றுவது என்கிற முனைப்பையும், அரசு வெளிப்படுத்தியிருப்பது என்பது மிகுந்த நிறைவைத் தருகிறது. நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

மூன்று விஷயங்களை இங்கே குறிப்பிடவேண்டுமென்று நான் நினைக்கின்றேன். ஒன்று, அவர்களுக்கான இலவச எரிவாயு சிலிண்டர் என்பதில், கடந்த 10 நாட்களுக்கு முன்பாக, உஜ்வாலா-2.0 என்கிற திட்டத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதன்வாயிலாக, ஆதார் அட்டை இல்லாமல்கூட, self-declaration *வாயிலாக இலவச எரிவாயு இணைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்படி, ஒருவேளை வாய்ப்பிருந்தால் நமக்கு கிட்டத்தட்ட 6 கோடி ரூபாயை மிச்சப்படுத்த முடியும். அந்தத் திட்டத்தில் இவர்களை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை நாம் கண்டறிந்து அதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுக்க முடியும்.*

இரண்டாவது, இந்தியாவுக்கும், இலங்கைக்குமான பயணிகள் கப்பல் போக்குவரத்தை தமிழகத்தில் இருக்கக்கூடிய துறைமுகங்களின் வாயிலாக, துவங்குவதற்காக மத்திய அரசு முயற்சி செய்து, அது மாநில அரசின் ஒப்புதல் கிடைக்காத காரணத்தினாலோ என்னவோ, காரைக்காலுக்கும்-காங்கேசன் துறைமுகத்திற்குமான பயணிகள் போக்குவரத்தைத் துவங்குவதற்கு மத்திய அரசு தயாராகிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில், தமிழகத்தில் இருக்கக்கூடிய துறைமுகத்திலிருந்து இதற்கான. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நன்றி தெரிவித்து, உரையை முடியுங்கள்.

திருமதி வானதி சீனிவாசன்: ஒரேயொரு விஷயம்தான் ஐயா. அவர்களின் நல்லதுக்காக, சாத்தியக்கூறுகளுக்காக நான் இந்தக் கோரிக்கையை வைக்கின்றேன். அதேபோல, தனுஷ்கோடிக்கும்-தலைமன்னாருக்கும் இடையே, மகாகவி பாரதியார் சொன்னதுபோல்; 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்பதற்கு ஏற்ப, இந்த நேரத்தில், ஒரு பாலத்தை அமைப்பதற்கு தமிழக அரசு அதற்கான கோரிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென்பதையும் எங்கள் கோரிக்கையாக நாங்கள் முன்வைக்க விரும்புகிறோம். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய முன்னாள் மத்திய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் திட்டம், 50 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நாங்கள் கட்டுவோம் என்று முன்னரே சொன்னார், இன்னும் கட்டவில்லை அம்மா. அதையும் கொஞ்சம் வாங்கிக் கொடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

***திரு. ஜி.கே. மணி:** நம்முடைய தொப்புள் கொடி உறவுகளாக, கண்ணீரோடும், கம்பலையோடும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இலங்கைத் தமிழர்கள் நம்முடைய தாய்த் தமிழ்நாட்டில் அகதிகளாக வந்தவர்கள். மகிழ்ந்து வாழ வேண்டும், நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமென்று வைத்திருக்கின்ற, அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், தாய்த் தமிழ்நாட்டின் அரசை பெறுப்பேற்றிருக்கின்ற தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் மகத்தான ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக நம்முடைய தொப்புள்கொடி உறவுகளுக்கு, நம்முடைய சொந்தங்களுக்கு, உணவு, உடை, இருப்பிடம், கல்வி, வேலைவாய்ப்பு என்று ஒட்டுமொத்த வாழ்வாதாரங்களை நிறைவேற்றக்கூடிய ஓர் அறிவிப்பாகவே இருக்கிறது என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. இலங்கைத் தமிழர்கள், அவர்கள் நீண்ட நெடிய உரிமைப் போராட்டத்தின் அடிப்படையில், தாய்த் தமிழ்நாட்டை எதிர்நோக்கியிருந்தார்கள். உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் எதிர்பார்ப்பது, தாய் தமிழ்நாடுதான். அந்த அடிப்படையிலேதான் கடந்த காலங்களில் தி.மு.க. ஆட்சியிலும், அ.தி.மு.க. ஆட்சியிலும் நாம் தொடர்ந்து அவர்களுக்குப் படிப்படியாக நிறைவேற்றி வந்த அறிவிப்புகளை, உதவிகளை எல்லாம் பார்த்திருந்தாலும்கூட, அவர்களுடைய கோரிக்கைகள் இன்னும் நிறைவேறவில்லை என்ற ஓர் ஏக்கம் உள்ளது. தமிழ்நாட்டுக்கு வந்து அகதி முகாம்களில் இருக்கக்கூடிய அவர்களுக்கு முழு உரிமை இல்லை என்று சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நன்றி சொல்லி முடியுங்கள், இது,* discussion *இல்லை; நன்றி என்று ஒரு வார்த்தைதான் சொல்லவேண்டும், நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர்* **அவர்களே,** *இதோ முடித்துவிடுகிறேன். வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். நாங்களெல்லாம் சட்டமன்றத்தில் அன்றைக்குப் பேசினோம், தொடர்ந்து பேசினோம். இது, படிப்பு மட்டும் இல்லை, ஒட்டுமொத்த வீடுகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இது* debate *இல்லை, நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 317 கோடியே, 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, மகத்தான ஓர் அறிவிப்புகளை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சி. நான் மேலும், சொல்ல விரும்புகிறேன், பணிவோடு, பேரவைத் தலைவருடைய,*

[திரு. ஜி.கே. மணி] [2021 ஆகஸ்ட் 27

ஒப்புதலோடு இன்றும் இங்கே இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வாழ்வளிக்க முன் வந்திருப்பது மகிழ்ச்சி. அவர்கள் நாட்டிலே உரிமை கிடைக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கிற அவலங்கள், அதற்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசுக்கு சற்று அழுத்தம் கொடுக்கவேண்டும், முடித்து விடுகிறேன். இதில் ஐ.நா. மன்றத்தில். . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது debate இல்லை, உங்களுக்கு தெரியாதா உறுப்பினர், இது, விதி 110–ன்கீழ் அறிவிப்பு, நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பதெல்லாம், இவ்வளவு மகத்தான காரியத்தை நிறைவேற்றிக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொடர்ந்து இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்ற வகையில், நம்முடைய மத்திய அரசுக்கும் இதை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விதி 110–ன்கீழான அறிவிப்புகளை பாட்டாளி மக்கள் கட்சி நெஞ்சார வரவேற்கிறது, வரவேற்கிறது என்று சொல்லி, அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசும், முதல்வரும், இந்தியாவிற்கு மட்டும் வழிகாட்டாமல், தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும், இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்துகின்ற வகையிலே, அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றியிருக்கிறார்கள். 20 தினங்களுக்கு முன்பு, அந்த முகாம்களிலே 16 பேர் தற்கொலைக்கு முயன்றார்கள் என்ற செய்தியைப் படித்தோம். அப்போதே, சொன்னேன், இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சென்றால், கண்டிப்பாக உடனே தீர்வு காண்பார் என்று, அதேபோல, விதி 110–ன்கீழ், வந்திருக்கின்ற இந்த அறிவிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

குறிப்பாக, கல்வியிலே அடுத்த தலைமுறை எப்படி சிறப்பாக இருக்க வேண்டுமென்று, முகாம்களிலே இருக்கின்ற அந்தக் குழந்தைகளுக்கு, மாணவர்களுக்கு வழங்கப்பட்ட

2021 ஆகஸ்ட் 27] [திரு. கு. செல்வபெருந்தகை]

கல்வி உதவித்தொகை, பாலிடெக்னிக் படிப்பிற்கு ரூபாய் 2500–லிருந்து மூன்று மடங்கு உயர்த்தி, 10 ஆயிரம் ரூபாய் ஆகவும், இளநிலை, கலை மற்றும் அறிவியல் படிப்பிற்கு ரூபாய் 3000–லிருந்து, 12 ஆயிரம் ரூபாய் ஆகவும், இளநிலை தொழில் சார்ந்த படிப்புகளுக்கு ரூபாய் 5 ஆயிரத்திலிருந்து, 20 ஆயிரம் ரூபாய் என மூன்று மடங்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். நிதியாதாரம் இல்லாத நிலையிலே, கஜானா *காலியாக்கப்பட்ட நிலையிலே, இன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்படிப்பட்ட ஓர் அறிவிப்பை, அறிவித்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. தந்தை செல்வா உங்களை வாழ்த்துகிறார், அமிர்தலிங்கம் அவர்கள் வாழ்த்துகிறார். தமிழகம் இல்லாமல் புலம்பெயர்ந்த தமிழர்களும் நம்முடைய அரசை, மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் (மணியடிக்கப்பெற்றது) காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியை, வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள், ஒரு வரியில் நன்றி சொல்லி முடியுங்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், மக்கள் முதல்வர் தளபதி அவர்கள், இந்தத் துறையை எனக்கு ஒதுக்கீடு செய்து கொடுத்து, அவர்களுடைய அறிவுரையின்படி, தமிழகம் முழுவதும் உள்ள இலங்கைவாழ் தமிழர்கள் வசிக்கின்ற அனைத்து முகாம்களுக்கும், நேரடியாகச் சென்று, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அழைத்துச் சென்று, அங்கே ஆய்வு செய்ததனுடைய அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்து வந்த, அத்தனை கோரிக்கைகளையும் நிறைவேற்றி, இன்றைக்கு விதி 110–ன்கீழ் அறிவித்துள்ள அறிவிப்புகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, அந்த முகாம் சார்ந்த மக்களின் சார்பாகவும், துறையின் சார்பாகவும், உலகத்தில் வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழர்களின் சார்பாகவும், பாராட்டுதல்களையும், நன்றியையும், தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி, வணக்கம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.